# "தர்மம் சர"

**धर्मं चर**

ஏப்ரல் , பிரதி-8 -கும்பகோணம்

Mantra Peeteswari Veda Patasala
Kumbakonam

## ப்ரஹ்மஸ்ரீ குருராம கனபாடிகள் பேசுகிறார்



### ஆசார்யாளின் ஆசார்யபக்தி

ஆதிசங்கர பகவத்பாதர்கள் ஆசார்யருள் முதல் இடம் வகிக்கும் நம் ஆதி ஆசார்யாள் ஆவார். நம் பழம் பேர் இலக்கிய மூன்றினுக்கும்- உபநிஷத், பகவத் கீதை, ப்ரஹ்ம சூத்ரம் எனும் ப்ரஸ்த்தான த்ரயத்திற்கு விளக்கங்கள் அருளிய பாஷ்யகாரர் அவர். தத்வ விளக்கம் செய்வதற்காகவே அவதரித்த அம்மஹான், தாம் ஏதோ சாதாரண மனிதர் என்னுமாப்போலே, குரு ஒருவரை நாடிச் சென்று, அவரிடம் யாவும் பயின்று, பின்னர் உலகினுக்கு உபதேசம் செய்யத் தலைப்பட்டார் என சங்கர விஜயங்கள் விரித்துரைக்கும். இது ஏதோ உலகிற்கு வழி காட்டுதற்காக, மேலுக்காகச் செய்த ஒரு சம்பிரதாயம் எனத் தப்பித் தவறி எவரும் நினைத்து விடலாகாது. ஆதி சங்கரர் எவ்வளவு உள்ளன்போடு, உணர்ச்சி பூர்வகமாகத் தம் ஆசார்யரைக் கொண்டாடுகிறார் என்பதை நாம் இங்கே காணலாம்.

ஸர்வ வேதாந்த ஸித்தாந்த ஸார ஸங்க்ரஹம்' என்பது பகவத்பாதர்களின் விரிவான ப்ரகரண க்ரந்தங்களுள் ஒன்று. அதன் எடுப்பு ஆசான் வணக்கத்தில் அமைந்தது.

**அகண்டானந்த ஸம்போதோ வந்தநாத்யஸ்ய ஜாயதே||**
**கோவிந்தம் தமஹம் வந்தே சிதானந்த தநும் குரும் ||**

இங்கு ஆசார்யர் தம் குருவுக்கு அஞ்சலி செலுத்துகிறார். ஆம், அவருடைய ஆசானின் திருநாமம் கோவிந்த பாதர் என்பதாம். எனவே சங்கரர் வாய் இனிக்க அந்தத் திவ்ய திருப் பெயரைக் கூறிக் கூறி வந்தனம் செய்வார். இந்த ச்லோகத்தில் குரு தம் குருவின் பெருமையைப் பகர்கிறார். எவரை வணங்கினால், குறைவிலாப் பேரானந்தம் கிட்டுமோ, அவர் தாம் ஆசார்யர்; அகண்ட, ஆனந்த, ஸம்போத: என்ற சொற்றொடர் குறைவிலா, ஆனந்த, நிறை ஞான வடிவம் என்று ஆசிரியப் பெருந்தகையைப் போற்றுகிறது. அவர் 'சித் ஆனந்த தனு' என்பதில் மேலும் விளக்கம் பெறுகிறார். அத்தகைய கோவிந்தரை வணங்கித் தம் நூலைத் தொடங்குகிறார்.விவேக சூடாமணி க்ரந்தமும் இவ்வாறே கோவிந்த வந்தனத்துடன் விரிகிறது. முதல் ச்லோகம் வருமாறு:

**ஸர்வ வேதாந்த ஸித்தாந்த கோசரம் தமகோசரம் |**
**கோவிந்தம் பரமானந்தம் ஸத்குரும் ப்ரணதோஸ்ம்யஹம் ||**

'பரம ஆனந்த வடிவம் ஆகிய ஸத்குரு கோவிந்தரை நான் வணங்குகிறேன்'' என்பது இரண்டாம் அடி. முதல் அடியோ ஆசிரியரை இறைவன் என்றே பேசுகிறது. அனைத்து வேதாந்த ஸித்தாந்தங்களிலும் உறைபவர் கடவுள். அவற்றின் மூலமே அவரை அடைதலாகும். அத்தகைய, அடைதற்கொண்ணாத ஆசானை வணங்குகிறார், இங்கே மெய்ச்சீடர் ஆகிய சங்கரர். நல்லாசான் ஒருவரை அணுகிப் பயிலவேண்டும். அப்போது தான் வீடுபேறு கிட்டும் என்பது சங்கரர் அடுத்தாற்போல் வழங்கும் யோசனையாகும். விவேக சூடாமணி நூலில் இது எட்டாவது ச்லோகம். மேலோர் சான்றோர் ஆகிய ஆசிரியரைச் சென்றடைந்து, பாடம் கேட்க வேண்டும் என்பது இந்த ச்லோகம்.ஆசார்யாள்" என்ற மாத்திரத்தில் லோகமெல்லாம் நினைத்துப் போற்றும் நம் பகவத்பாதாளுக்கு இருந்த குருபக்தி சொல்லி முடியாது. பத்ரிநாத்தில் அவர் தம்முடைய குருவான கோவிந்த பகவத்பாதரையும், பரமகுரு (குருவுக்கு குரு) வான கௌடபாதரையும் ஸாக்ஷாத் தக்ஷிணாமூர்த்தி ஸ்வரூபமாகவே பார்த்து, அப்போதுதான் தக்ஷிணாமூர்த்தி அஷ்டகம் சொல்லி, அடிக்கு அடி அவர்களை நமஸ்காரம் பண்ணினார், என்று சொல்கிறதுண்டு. இவரே அந்த தக்ஷிணாமூர்த்தியின் அவதாரந்தான். குருவின் மஹிமையை ஆசார்யாள் ஒரு இடத்தில் ச்லாகித்துச் சொல்லும்போது, "பித்தளையைக் கூடப் பொன்னாக்குகிற ஸ்பர்சவேதி மாதிரி குருவானவர் பித்தளை மனஸுக்கரார்களையும் மாற்றித் தங்கமாக ஜ்வலிக்கச் செய்பவர் என்று சொன்னால்கூட குரு மஹிமையை உள்ளபடி சொன்னதாகாது. ஏனென்றால் ஸ்பர்சவேதியில் இருந்த பித்தளை தான் மட்டுமே ஸ்வர்ணமாக ஆகுமே தவிர, மற்ற பித்தளை வஸ்துக்களை ஸ்வர்ணமாக்குகிற ஸ்பர்சவேதியாக மாறாது. ஆனால் குருவை ஆச்ரயித்த சிஷ்யனோ, தான் பூர்ணத்வம் பெறுவதோடு மட்டுமின்றி, தானும் குருவாகி மற்றவர்களுக்குப் பூர்ணத்வம் தருபவனாகி விடுகிறான். அதனால் குரு ஸ்பரிசவேதிக்கும் மேலே" என்கிறார்*.குருவின் அநுக்கிரஹத்தால்தான் ஞானம் கிடைக்கும் என்ற விஷயம் சாந்தோக்ய உபநிஷத் சொல்லியிருக்கிறது. ஆசார்யவான் புருஷோ வேத – ஆசார்யனைப் பெற்ற புருஷன் தான் ஞானத்தை அடைகிறான்.ஜகத்குருவின் பதம் பற்றி ஞானத்தை அடைவோமாக.

**ஜய ஜய சங்கர** **ஹர ஹர சங்கர**



## ஸ்ரீமதி ஸௌம்யா குருராமன்




**அன்னையும் குருவாக:ஆசார்யாளின் ஆமோதிப்பு**

'நல்வழிப்படுத்துவது' என்பதுதானே குருவின் முக்யமான கார்யம்? அதனால் அம்மாவுக்கும் அப்பா மாதிரியே குரு ஸ்தானம் உண்டு. இதையும் ஆசார்யாள் எடுத்துக்காட்டிச் சொல்லியிருப்பதுண்டு

பிள்ளை குணவானாக இருப்பதில் அம்மாவுக்கே ப்ராதான்யம் (பிரதானமான ஸ்தானம்) என்று அவர் சொன்னதை? குணவதியான மாதாவின் கர்ப்பத்தில் ரூபமாகி, அவளிடமிருந்து ஆஹாரம் - பானம் பண்ணிக் குழந்தை வளர்வதாலேயே முக்யமாக ஒரு ப்ரஜைக்கு குண ஸம்பத்து ஏற்படுகிறது. இது அவளுக்கே தெரியாமல் அவள் புத்ரனை நல்வழிப்படுத்துவது!அப்புறம் சின்ன வயஸில் அதற்குக் கதை புராணம் சொல்லி, ஸ்தோத்ரங்கள், நீதிப் பாடல்கள் சொல்லிக் கொடுத்து நல்வழிப்படுத்துகிறாள். 'இப்படிப் பண்ணப்பா, இப்படிப் பண்ணாதேப்பா!' என்று அநேகம் சொல்லிக் கொடுக்கிறாள். அவளுடைய நல்ல நடத்தையைப் பார்த்துப்பார்த்தே - அதன் ஸூக்ஷ்மமான சக்தியாலேயே கூட - பாலப்பிராயத்தில் ஒருத்தன் நல்லவற்றைத் தெரிந்து கொண்டு அந்தப்படி செய்கிறான். 'தாயைப் போலப் பிள்ளை' என்று வசனமே இருக்கிறது.

இதையெல்லாம் ஆசார்யாள் கவனித்து - ரொம்பவும் 'ஸிம்பதெடிக்'காகவும் கௌரவம் கொடுத்தும் கவனித்துத்தான் - கடோபநிஷத்திலே ஒரு இடத்தில் ப்ருஹதாரண்யகத்தையும் QUOTE பண்ணிக் காட்டி, வேதம் வகுத்துக் கொடுக்கிற விதிமுறையின்படி குருவைப் போலவே அம்மா - அப்பாவுக்கும் - 'அம்மாவுக்கும்' என்பதைக் கவனிக்க வேண்டும், மாதா - பிதா - குரு என்று மூன்று பேருக்குமே - 'ப்ரமாண காரணம்' என்ற பெருமை, உரிமை இருப்பதாகக் காட்டியிருக்கிறார். 'ப்ரமாண காரணம்' என்பதற்கு 'அதிகாரபூர்வமான குரு ஸ்தானம்' என்று இங்கே அர்த்தம்.

**அதாவது, தாயாருக்கும் குருஸ்தானம் உண்டு.**



## "அடிப்படை தர்மங்கள்"

**வித்வான் விரூபாக்ஷ சர்மா**

प्राङ्मुखः उदङ्मुखो वा आसीनः शौचम् आरभेत,
शुचौ देशे शुद्धजले आचमनं कारयेत् ।

கிழக்கு அல்லது வடக்கு முகமாய் உட்கார்ந்து சௌசம் செய்து கொள்ள வேண்டும். பிறகு சுத்தமான ஜலத்தில் , சுத்தமான இடத்தில் அமர்ந்து ஆசமனம் செய்ய வேண்டும் .



ஸ்ரீ சர்மா சாஸ்திரிகள்

காயத்ரீஜபம் செய்யும்போது கைகளிரண்டும் சேர்ந்திருக்கலாமா?

சேர்ந்திருக்கக்கூடாது.

ஜபகாலத்தில் இரண்டு கைகளையும் வஸ்த்ரத்தினால் மூடிக்கொண்டு, இரண்டு கைகளினாலும் கணக்குச் செய்துகொண்டு ஜபிக்க வேண்டும் என்றும், கைகள் உத்தானங்களாக, முகத்திற்குச் சரியாக காலையிலும், மார்புக்குச்சரியாக மத்யானமும் (ஸ்தப்தகரங்களாக), ஸாயங்காலம் நாபிக்குச்சரியாக அதோமுகமாகவும், ஒன்றுக்கொன்று சேராமல் கைகளை வைத்துக்கொண்டு, வலது கையில் நடுவரலில் ஜபமாலையை வைத்துக்கொண்டு, கட்டைவிரலினால் எண்ணிக்கை செய்யவேண்டுமென்றும், ஜபமாலையை இடது கையால் தோடக்கூடாது என்று சொல்லியிருப்பதாலும், பர்வங்களினால் எண்ணிக்கை காயத்ரீ ஜபத்திற்கு விசேஷமாகச் சொல்லப்பட்டிருப்பது போல், ருத்ராக்ஷ குசக்ரந்திகளையும் பர்வாவுக்குச் சமானமாகவும் விசேஷமாகவும் சொல்லப் பட்டிருப்பதாலும், இரண்டு கைகளும் ஒன்றுசேர்ந்து இருப்பதற்கு ஹேது இல்லை. இடதுகை ஜபத்தில் ஆவ்ருத்தி எண்ணிக்கையில் உபயோகப்-படுத்திக் கொள்ளவேண்டும்

பரான்ன நியமம் **வேங்கடேஷ்- பூர்வமீமாம்ஸா சிரோமணி**


தன்னுடைய வீட்டிற்க்கு ஒருத்தரை சாப்பிடுவதற்குக்காக கூட்டிக்கொண்டு வந்தார் ஒருவர் .. அழைத்து வந்தவர் நன்றாகச் சாப்பிட்டார். சாப்பிட்ட பிறகு கையலம்புவதற்க்காக வெள்ளிச் சொம்பில் ஜலம் கொடுத்தார்கள்.சாப்பிட்டவருக்கு வெற்றிலைப்பாக்கு, தக்ஷிணை, யெல்லாம் கொடுக்க வேண்டுமென்று எண்ணி வீட்டு யஜமானர் அனைத்தையும் தயாராக எடுத்து வைத்துக் கொண்டிருக்கிறார். ஆனால், கையலம்பப் போனவர் திரும்ப வரவேயில்லை.! அரை மணி காத்திருந்து பார்த்தவர், கையலம்புவதற்கு இத்தனை நாழியா ஆகும்? என்று யோசித்தபடி வாசலில் போய் நின்றார். அதற்குள் வாசலில் ஒருத்தர் ஓடி வந்து இவரிடம் கேட்டார். சுவாமி! உங்கள் வீட்டிலே என்ன விசேஷம்?ஒண்ணும் இல்லையே... இல்லை கோ (பசு மாடு) தானம் செய்திருக்கிறீரே! என்ன விசேஷம் என்று கேட்டேன். கோதானமா.....? ஆமாம் ஒருத்தர் கையில் வெள்ளிச்சொம்போடு உங்கள் பசுவையும் கன்றுக் குட்டியையும் பிடித்துக் கொண்டு ஊர் எல்லையில் போவதைப் பார்த்தேன். உங்கள் பசு மாடுதானே அது. உடனே நான்கு பேரை அழைத்துக் கொண்டு ஓடிப்போய்ப் பார்த்தால் கையிலே வெள்ளிச் சொம்பை வைத்துக்கொண்டு, கன்றுக் குட்டியும் பசுவுமாய் போய்க் கொண்டிருக்கிறார் அவர்! கையும் களவுமாய் அவரைப் பிடித்துக் கேட்டார்கள். அன்னமிட்ட வீட்டுக்கே இப்படிப் பண்ணுகிற அளவுக்குத் தப்பான எண்ணமா உனக்கு! இது என்ன அக்கிரமம்? என்று கேட்டார்கள். கேட்டதும் அவர் ஓ என்று அழ ஆரம்பித்து விட்டார்.எங்கள் ஊரிலே. எங்கள் கிருஹத்திலே வந்து என்னைப் பற்றிக் கேளுங்கள். இதுவரைக்கும் ஒரு தப்பும் நான் பண்ணியதில்லை.இன்றைக்குத் தான் இந்தத் தப்பைப் பண்ணியிருக்கிறேன்.ஒரு நாள், ஒரு வேளை உங்கள் கிருஹத்தில் சாப்பிட்டதற்கே வெள்ளிச் சொம்பை திருடவேண்டும் என்று புத்தி ஏற்பட்டுப் போச்சு.இன்னும் நாலு நாள் சாப்பிட்டிருந்தால் என்னென்ன பண்ணுவேனோ என்றார்!ஆகையினால் பெரியவர்கள் கண்ட இடத்திலே சாப்பிட மாட்டார்கள். அப்படி அவர்கள் சாப்பிடாததற்கு நாம் தோஷம் சொல்லவும் கூடாது. பரான்ன நியமம் என்பது ரொம்ப முக்கியம்.பரமயோக்யதை உள்ளவர்கள் எல்லா இடங்களிலேயும் சாப்பிட மாட்டார்கள்.ஆதலால் தம் கிருஹத்தில் அத்தகையவர்கள் சாப்பிட வந்தால் அவ்வாறு அவர்கள் வருவதே பெரிய பாக்கியம் என்கிறது வேதம். அந்த அதிதி ரூபத்தில் பகவான் எம்பெருமானே நம் கிருஹத்துக்குள்ளே வருகிறான் என்கிறது.


# வேதம் ஓதிய வேதியர்க்கோர் மழை

## வேதமோதிய வேதியனே சாந்த குணமுள்ள யானை




# வேத சம்ரக்ஷணமே லோகஸம்ரக்ஷணம்




கற்பார் இராம பிரானை யல்லால் மற்றும் கற்பரோ ?

ராமநவமி பூஜை பாடசாலையில் இனிதே நடைபெற்றது .

ஜெய் ஸ்ரீராம் .....



## நமது பாடசாலையில் நடக்கவிருக்கும் முக்கிய நிகழ்வு



பகவத் பாதாள் ஸ்ரீ ஆதி சங்கரர் ஜெயந்தி மஹோத்ஸவம்

2nd May 2025

கும்பகோணம் ஸ்ரீ மந்த்ர பீடேஸ்வரி வேத பாடசாலையில் அமோகமாக நடைபெற திட்டமிடப்பட்டுள்ளது.

சம்பூர்ண ருக், சாம மற்றும் யஜுர் வேத பாராயணம்

ஏப்ரல் 27 முதல் மே 2 வரை

ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மே 2 ஜெயந்தி அன்று காலையில்

கோபூஜை,
உபநிஷத் பாராயணம்,
ஆவஹந்தீ ஹோமம்
முதலியவைகள் நடைபெறும்.

அன்று மாலையில் சுமார் 5.30 மணி

அளவில் புஷ்ப அலங்காரத்துடன் **ஸ்ரீ சங்கரர் வீதி ஊர்வலம்** பாடசாலை வளாகத்தில் துவங்கி சோலையப்பன் தெரு முழுவதும் வேத கோஷத்துடனும், ஸ்தோத்ர பாராயணம் சஹிதம் நடைபெறும்.

ஆஸ்திக மஹா ஜனங்கள் அனைத்து வைபவங்களிலும் கலந்துக் கொண்டு பிரசாதத்தையும் ஸ்வீகரித்துக் கொண்டு ஆச்சார்யாள் அருளுக்கு பாத்திரமாகும்படி வேண்டுகிறோம்.



வித்யார்த்தி ஜனார்த்தனன்